**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

OS.No. 448/2019

PW1 : **திருமதி. மேரி ராணி க/பெ. ஜான்**

**11.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வட்டம் | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நான் தற்போது பெங்களூரில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் 2ம் வாதி. நான் வாதி தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். அதனை வழக்கறிஞர் படித்து காண்பித்த பிறகு தான் கைரேகை செய்தேன்.

1. கண்ணாயிரம் என்பவரது இறப்பு சான்றிதழ் அசல் **வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. ராஜம்மாள் என்பவரது இறப்பு சான்றிதழ் அசல் **வா.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. ராஜம்மாள் என்பவரது வாரிசு உரிமை சான்றிதழ் அசல் **வா.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தாவா சொத்திற்கான வழிகாட்டு மதிப்பு (சர்வே எண்.257/1 முதல் 257/6 வரை) **வா.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 06/11/2015 தேதியிட்ட வாதி தரப்பினரிடமிருந்து 3 ம் மற்றும் 4ம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 22.11.2015 தேதியிட்ட 3ம் மற்றும் 4ம் பிரதிவாதிகளின் வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு நகல் **வா.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தாவா சொத்திற்கான வழிகாட்டு மதிப்பு (சர்வே எண் 257/1 முதல் 257/6 வரை) **வா.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தாவா சொத்திற்கான வழிகாட்டு மதிப்பு (சர்வே எண் 256/1 முதல் 256/2 வரை) **வா.த.சா.ஆ8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 11/03/2016 தேதியிட்ட தாவா சொத்திற்கான SLR சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.